செ.வெ.எண் 123 (A) நாள் 06.02.10

பவள விழா ஆண்டு
2009 - 2010
1935 முதல் தலைமுறைதாண்டி தொடரும் பந்தம்

# கோ–ஆப்டெக்ஸின்
# குளிர்சாதன வசதியுடன் கூடிய புதிய விற்பனை நிலையம் திறப்பு விழா

## பத்திரிக்கை குறிப்பு

இந்திய ஜவுளிச் சந்தையில் பிரதான பங்கு வகித்துவரும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், தற்சமயம் பவளவிழா ஆண்டைக் கொண்டாடி வருகிறது. கடந்த 75 ஆண்டுகளாக, தமிழ் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு சிறப்பான முறையில் சேவையாற்றி வருவதுடன், இந்தியாவிலுள்ள கைத்தறித் துணிகளை விரும்பும் மக்களின் தேவைக்கேற்ப புதிய வடிவமைப்புகளையும், வண்ணக் கலவைகளையும், மாதந்தோறும் விற்பனைக்கு கொண்டுவருவதில், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் முன்னோடியாகச் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு வாடிக்கையாளர்களின் இரசனைக்கேற்ப, புதிய இரகங்களையும், வடிவமைப்புகளையும், வண்ணக் கலவைகளையும் வெளியிடுவதன் மூலமாக, கோ–ஆப்டெக்ஸ் துணிகளை வாடிக்கையாளர்கள் அதிக அளவில் வாங்குவது கடந்த 4 ஆண்டுகளில், அதாவது 2005–06 ஆம் ஆண்டில் ரூ.102 கோடியாக இருந்த விற்பனை, 2008–09 ஆம் ஆண்டில் ரூ.150 கோடியாக உயர்ந்தது ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. நடப்பாண்டு, பவளவிழா ஆண்டாக இருப்பதால், இதற்கென்று ஒரு பிரத்தியேக விற்பனைக் குறியீட்டை நிர்ணயித்து, விற்பனை ஏற்பாடுகள் சிறப்பாக செய்ததன் காரணமாக, ஏப்ரல் 2009 முதல் ஜனவரி 2010 வரை ரூ.169.00 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது. ஏப்ரல் 2008 முதல் ஜனவரி 2009 வரையில் விற்பனையான ரூ.134.00 கோடியை ஒப்பிடும்பொழுது இந்த விற்பனை உயர்வு 26 சதவீதம் ஆகும். கடந்த முழு ஆண்டின் விற்பனையை ஒப்பிடும்போது இந்த விற்பனையானது 12 சதவீதம் உயர்ந்துள்ளது.

பண்டிகைவாரியாக விற்பனையை ஒப்பிடும்பொழுது, தீபாவளி 2008 பண்டிகை விற்பனை ரூ.62.00 கோடியாக இருந்தது, 2009 தீபாவளி பண்டிகை விற்பனை ரூ.78.00 கோடியாக உயர்ந்துள்ளது. அதேப்போன்று பொங்கல் 2009 பண்டிகைக்கான விற்பனை ரூ.33.02 கோடியாக இருந்தது, 2010 பொங்கல் பண்டிகை விற்பனை ரூ.39.32 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு விற்பனையை ஒப்பிடும்பொழுது இந்த விற்பனையானது 19 சதவீதம் அதிகம் ஆகும்.

இந்த விற்பனை உயர்வைக் கண்ணுறும்பொழுது, கோ–ஆப்டெக்ஸ் எடுத்துவரும் பல்வேறு வியாபார யுக்திகளுக்கு வாடிக்கையாளர் இடையே அதிக வரவேற்பு பெற்றுள்ளதே முக்கிய காரணமாக அமைந்துள்ளது தெரிய வருகிறது. நடப்பாண்டில் மாதந்தோறும் நடைபெற்ற கண்காட்சியின் மூலம் இதுவரை 2055 புதிய வடிவமைப்புகள் பல்வேறு வண்ணக் கலவைகளில் வெளியிடப்பட்டுள்ளன. பிப்ரவரி 2010 மாத இறுதியில் கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் தேசிய கைத்தறி கண்காட்சி நடைபெறவுள்ளது.

தற்பொழுது குறளகம் கட்டிடத்தில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் 500 சதுர அடியில் முதல் மாடியில் இயங்கி வருகின்றது. இந்த விற்பனை நிலையத்தில் ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ.40.00 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை நடைபெற்று வருகிறது. தற்பொழுது தரை தளத்தில் ரூ.15.00 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டு 1800 சதுர அடியில் விற்பனை நிலையம் துவக்கப்பட உள்ளது. இந்த விற்பனை நிலையத்தின் மூலம் ஆண்டுக்கு ரூ.1.00 கோடி அளவிற்கு விற்பனை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2/3

நவீனமயமாக்கப்பட்டுள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய இந்த புதிய கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை 6.2.2010 அன்று காலை 11.30 மணியளவில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு.**கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்** அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்த விழாவிற்கு கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை முதன்மைச் செயலாளர் திரு.**ஆர்.ராஜகோபால்,** இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு.**வெ.சந்திரசேகரன்,** இ.ஆ.ப., தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ் அவர்கள் வரவேற்று விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புற செய்தார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை.

கோ–ஆப்டெக்ஸ்